DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 31/2022** | |
| Prosecution Witness | | | : | **PW - 10** | |
| Name | : | முருகதாஸ் | Caste | : | |
| Father's Name | : | திரு.மாரியப்பன் | Calling | : | |
| Village | : | பழைய செட்டி தெரு, உப்பிலியப்பன்கோவில் | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11th day of September 2023. 11-09-2023

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை)

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் பழைய செட்டி தெரு, உப்பிலியப்பன்கோவிலில் வசித்து வருகிறேன். ஆசாரி வேலை பார்க்கிறேன். இறந்து போன ராஜேந்திரன் வீட்டிற்கு கிழக்கே நான் வசிக்கிறேன். ராஜேந்திரன் நாட்டாற்றங்கரையில் காளவாய் தொழில் செய்தும், காய் கறி போட்டும் விவசாயம் செய்தும் வந்தார். ராஜேந்திரனுக்கும் சந்தோஷ், சுரேஷ்க்கும் மேற்கில் உள்ள தோட்டம் சம்மந்தமாக பிரச்சனை ஓடிக்கொண்டிருந்தது. 02/07/2021 வயலுக்குள்ளேயே ராஜேந்திரன் இறந்து கிடப்பதாக செய்தி கிடைத்தது. 02 ஆம் தேதி நான் அவர் இறந்து கிடந்த இடத்திற்கு போன போது, போலிசார் அந்த இடத்தை பார்வையிட்டு எழுதிக்கொண்டு படம் வரைந்தார்கள். அந்தயிடத்தில் சாம்பிளுக்கு வெறும் மண்ணும், ரத்தம் படிந்த மண்ணும் எடுத்தார்கள். நான்

அவர்கள் எழுதிய பார்வை மகஜரிலும் கைப்பற்றுதல் மகஜரிலும் சாட்சியாக கையொப்பம் போட்டேன். காண்பிக்கப்படும பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். முதலாவதாக சந்தான மௌளிஸ்வரன் கையெழுத்து போட்டார். அந்த பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.8 ஆகும்.** காண்பிக்கப்படும கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். முதலாவதாக சந்தான மௌளிஸ்வரன் கையெழுத்து போட்டார். அந்த கைப்பற்றுதல் மகஜரிலுள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.9 ஆகும்.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/உண்மை நகல்/

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 31/2022** | |
| Prosecution Witness | | | : | **PW - 9** | |
| Name | : | **சந்தான மௌளிஸ்வரன்** | Caste | : | |
| Father's Name | : | **கண்ணன்** | Calling | : | |
| Village | : | **பழைய செட்டி தெரு, உப்பிலியப்பன்கோவில்** | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11th day of September 2023. 11-09-2023

**(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை)**

**முதல் விசாரணை**

**நான் தற்சமயம் பழைய செட்டி தெரு, உப்பிலியப்பன்கோவிலில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை பார்க்கிறேன். இறந்து போன ராஜேந்திரன் என் வீட்டிற்கு எதிர்வீட்டில் வசித்து வந்தார். ராஜேந்திரன் நாட்டாற்றங்கரையில் காளவாய் தொழில் செய்தும், காய் கறி போட்டும் விவசாயம் செய்தும் வந்தார். ராஜேந்திரனுக்கும் சந்தோஷ், சுரேஷ்க்கும் மேற்கில் உள்ள தோட்டம் சம்மந்தமாக பிரச்சனை ஓடிக்கொண்டிருந்தது.** 02/07/2021 **வயலுக்குள்ளேயே ராஜேந்திரன் இறந்து கிடப்பதாக செய்தி கிடைத்தது.** 01/07/2021 **அன்று ராஜேந்திரனை வெட்டப்போவதாக சந்தோஷ் சத்தம் போட்டதாக கேள்விபட்டேன்.** 02 **ஆம் தேதி நான் அவர் இறந்து கிடந்த இடத்திற்கு போன போது, போலிசார் அந்த இடத்தை பார்வையிட்டு எழுதிக்கொண்டு படம் வரைந்தார்கள். அந்தயிடத்தில் சாம்பிளுக்கு வெறும் மண்ணும், ரத்தம் படிந்த**

மண்ணும் எடுத்தார்கள். நான் அவர்கள் எழுதிய பார்வை மகஜரிலும் கைப்பற்றுதல் மகஜரிலும் சாட்சியாக கையொப்பம் போட்டேன். காண்பிக்கப்படும பார்வை மகஜரிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். இரண்டாவதாக முருகதாஸ் கையெழுத்து போட்டார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.**6 **ஆகும்.** காண்பிக்கப்படும கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். இரண்டாவதாக முருகதாஸ் கையெழுத்து போட்டார். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.**7 **ஆகும்.** அந்த ரத்தம் படிந்த மண் **சா.பொ.**1 **ஆகும்.** ரத்தம் படியாத மண் **சா.பொ.**2 **ஆகும்.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/உண்மை நகல்/

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 31/2022** | |
| Prosecution Witness | | | : | **PW - 8** | |
| Name | : | திரு.சங்கர் | Caste | : | |
| Father's Name | : | துளசிராமன் | Calling | : | VAO |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11th day of September 2023. 11-09-2023

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை)

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் நாச்சியார்கோவிலில் கிராம நிர்வாக அலுவலகராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஏற்கனவே திருநாகேஸ்வரம் அணைக்குடியில் கிராம நிர்வாக அலுவலகராக பணியாற்றினேன். கடந்த 03/07/2021 அன்று நான் என் அலுவலகத்தில் பணியில் இருந்த போது, என்னுடன் சன்னாபுரம் கிராம நிர்வாக அலுவலர் திரு.தியாகராஜன் என்பவரும் உடன் இருந்தார். அப்போது திருநாகேஸ்வரம் பழையசெட்டி தெருவை சேர்ந்த ஜெயராமன் மகன் செந்தில் எங்கள் அலுவலகம் வந்து 02/07/2021 அன்று அய்யாவாடி நாட்டாற்றங்கரையில் ராஜேந்திரன் என்பவர் கொலை செய்யப்பட்டது சம்மந்தமாக 03/07/2021 அன்று சந்தோஷ் என்பவர் நீதிமன்றத்தில் சரணடைந்து விட்டதால், மேற்படி சந்தோஷ் என்பவர் தனது பெயரையும் கூறிவிடுவார். அதனால் என்னை போலிசார் கைது செய்துவிடுவார்கள் என்ற பயத்தில் எங்களிடம் வந்து சரணடைவதாக சொல்லி தானாக ஒரு எந்த வற்புறுத்தலோ, துன்புறுத்தலோ இன்றி ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அவர் சொன்ன

வாக்குமூலத்தை நான் அப்படியே என் கையால் எழுதி பதிவு செய்தேன். அவர் சொன்ன வாக்குமூலத்தை பதிவு செய்து, அதில் செந்தில் என்பவரிடம் கடைசி பக்கத்தில் கையெழுத்து வாங்கினேன். அதில் நானும், கிராம நிர்வாக அலுவலர் தியாகராஜனும் கையெழுத்து போட்டிருக்கிறோம். அவ்வாறு என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த செந்தில் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். செந்தில் கொடுத்த வாக்குமூலம் **அ.சா.ஆ.4 ஆகும்.** பின்னர் செந்திலை திருநீலக்குடி காவல் நிலையம் அழைத்து சென்று, செந்தில் கொடுத்த வாக்குமூலத்தையும், செந்திலையும் அங்கிருந்த ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். அப்போது ஆய்வாளர் பிரச்சனைக்கூரிய இடம் யாருடைய அனுபவத்தில் உள்ளது என்று கேட்டதற்கு நான் ஒரு அனுபவ சான்று கொடுத்தேன். அந்த அனுபவ சான்று **அ.சா.ஆ.5 ஆகும்.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/உண்மை நகல்/
ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 31/2022** | |
| Prosecution Witness | | | : | **PW - 7** | |
| Name | : | பழனிசாமி | Caste | : | |
| Father's Name | : | சுப்பையன் | Calling | : | |
| Village | : | பழைய செட்டி தெரு, உப்பிலியப்பன் கோவில் | Religion | : | |
| Taluk | : | கும்பகோணம் | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11th day of September 2023. 11-09-2023

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை)

**முதல் விசாரணை**

நான் பழைய செட்டி தெரு, உப்பிலியப்பன் கோவிலில் வசித்து வருகிறேன். விவசாய வேலை பார்க்கிறேன். அ.சா.1 முதல் அ.சா.6 யை தெரியும். அ.சா.1 என் தம்பி ராஜேந்திரனின் மருமகன், அ.சா.2 என் தம்பி மனைவி, அ.சா.3 என் தம்பியின் மகன். என் தம்பி அய்யாவாடி நாட்டாற்றங்கரையில் கொல்லையில் காளவாய் போட்டு, காய் கறி பயிற் செய்தும் ஒரு கொட்டகை போட்டு வசித்து வந்தார். வீட்டிற்கு 2, 3 நாளுக்கு ஒரு முறை தான் வருவார். வீட்டிற்கு மேல்புறம் என் அண்ணன் சந்திரகாசனுக்கு சொந்தமான இடம் இருந்தது. அந்த இடத்தை சந்திரகாசன் சந்தானகிருஷ்ணனிடம் வாங்கினார். சந்திரகாசன் இறந்த பிறகு என் தம்பி ராஜேந்திரன் தான் அந்த இடத்தை பராமரித்து வந்தார். அந்தயிடத்தை சந்தோஷ், செந்தில் ஆகியோர் கேட்டு பிரச்சனை செய்து வந்தார்கள். ராஜேந்திரனிடம் இடம் கேட்டு பிரச்சனை

செய்தவர்கள் ஆஜர் எதிரிகள் தான். ஒரு 20 ரூபாய் பத்திரத்தில் இடத்தை கொடுப்பதாக ராஜேந்திரனிடம் கையெழுத்து வாங்கினார்கள். ஆனால் இடத்தை ராஜேந்திரன் கொடுக்க மாட்டேன் என்று சொல்லி, வழக்கறிஞர் வைத்து அறிவிப்பு சந்தோஷ், சுரேஷ் குமாருக்கு அனுப்பினார். அறிவிப்பு அனுப்பிய பிறகு என் தம்பி ராஜேந்திரனை சந்தோஷ் வந்து மிரட்டிவிட்டார். அங்காலம்மன்கோவில் தெருவில் நின்றுக்கொண்டு சந்தோஷ், ராஜேந்திரனை வெட்டிவிடுவேன் கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதை அங்கிருந்தவர்களில் மணிகண்டன் அ.சா.1 எங்கள் மாப்பிள்ளைக்கு தகவல் சொன்னார். அ.சா.1 வீட்டில் வந்து இவ்வாறு சந்தோஷ் மிரட்டும் விவரத்தை என் தம்பியிடமும், என் தம்பி மனைவியிடமும் சொன்னார். அதற்கு என் தம்பி காலையில் வந்து சந்தோஷ் மிரட்டிவிட்டு போனதாகவும் நான் பத்திரமாக இருந்துக்கொள்கிறேன் என்று சொல்லி மாப்பிள்ளையை அனுப்பிவிட்டார். மறுநாள் 2 ஆம் தேதி சந்தானகிருஷ்ணன் வந்து என் தம்பி தலையில் வெட்டுப்பட்டு கிடப்பதாக சொன்னார். நான் போய் பார்த்தேன். தலை, கழுத்து, புடணி எல்லாம் வெட்டுப்பட்டு ரத்தத்தோட தலை குப்புற ரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார். அ.சா.1 புகார் கொடுத்தார். என் அண்ணன் சுந்தரேசன், அவருடைய பையன் பெயர் ரமேஷ். எதிரி செந்தில் குமாரின் தம்பி மருமகன் செல்லப்பா என்பவர் மீது என் அண்ணன் சுந்தரேசன் சிவில் வழக்கு போட்டிருந்தார். அந்த வழக்கு என் அண்ணனுக்கு சாதகமாக தீர்ப்பானது. அதில் இருந்து என் குடும்பத்திற்கும் ஆஜர் எதிரி செந்தில் குமார் குடும்பத்திற்கு இடையே முன் விரோதம் இருந்து

வந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/உண்மை நகல்/

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 31/2022** | |
| Prosecution Witness | | | : | **PW - 6** | |
| Name | : | சந்தோஷ் | Caste | : | |
| Father's Name | : | துரை | Calling | : | |
| Village | : | பிள்ளையார்கோவில்தெரு, உப்பிலியப்பன் கோவில் | Religion | : | |
| Taluk | : | கும்பகோணம் | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11th day of September 2023. 11-09-2023

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை)

**முதல் விசாரணை**

நான் பிள்ளையார்கோவில்தெரு, உப்பிலியப்பன் கோவில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை பார்க்கிறேன். அ.சா.1 முதல் அ.சா.5 யை தெரியும். ஆஜர் எதிரிகளான சந்தோஷ், ராஜேஷ், செந்தில் குமார் ஆகியோரை தெரியும். அ.சா.1 அருண் ராஜ் தெரியும். என் ஊரில் பெண் எடுத்திருக்கிறார். ஆஜர் எதிரி சந்தோஷ் பிள்ளையாம் தோப்பு கோவிலுக்கு பின்புறம் குடியிருக்கிறார். இறந்து போன ராஜேந்திரன் என்ன வேலை பார்த்தார் என்று தெரியாது. எதிரி சந்தோஷ் என் சிறு வயது தோழர். இந்த வழக்கு சம்பவம் எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கேள்வி – இறந்து போன ராஜேந்திரன் பழைய செட்டி தெருவில் குடியிருக்கிறாரா என்றால்?

பதில் – ஆமாம்.

கேள்வி – ராஜேந்திரன் அய்யாவாடி நாட்டாற்றங்கரையில் சொந்தமாக இடமும், வயலும் வைத்து அதில் செங்கல் காளவாய் போட்டும், அருகில் உள்ள இடத்திலும் காய் கறி பயிற் செய்தும் வந்தார் என்றால்?

பதில் – ஆமாம்.

கேள்வி – ராஜேந்திரன் மட்டும் அங்கேயே ஒரு கீற்றுக்கொட்டகை போட்டு குடியிருந்தாரா என்றால்?

பதில் – ஜாமான்கள் போட்டு வைத்திருப்பார்.

கேள்வி – ராஜேந்திரனோடு எப்போதும் சந்தானகிருஷ்ணனும் உடன் இருப்பாரா என்றால்?

பதில் – ஆமாம். பக்கத்து இடம்.

கேள்வி – ராஜேந்திரன் இடத்திற்கு பக்கத்தில் சந்திரகாசனுக்கு சொந்தமான இடம் இருந்தது என்றால்?

பதில் – தெரியாது.

கேள்வி –சந்திரகாசன் உயிருடன் இருக்கிறாரா என்றால்?

பதில் – தெரியாது.

கேள்வி – சந்திரகாசன் இறந்த பிறகு அந்தயிடத்தை ராஜேந்திரன் தான் பராமரித்து வந்தாரா என்றால்?

பதில் – தெரியாது.

கேள்வி – சந்தானகிருஷ்ணன் சந்திரகாசனுக்கு விற்ற இடத்தை கேட்டு சந்தோஷ்ம், சுரேஷ்ம் போய் தகராறு செய்தார்களா என்றால்?

பதில் – ஊரில் பேசிக்கொண்டார்கள்.

கேள்வி – அது சம்மந்தமாக ஊர் முக்கியஸ்தர்களை வைத்து ஒரு பத்திரத்தில் எழுதி வாங்கிக்கொண்டார்களா என்றால்?

பதில் – ஆமாம். எழுதி வாங்கியதாக பேசிக்கொண்டார்கள்.

கேள்வி – அவ்வாறு பத்திரத்தில் எழுதி கொடுத்துவிட்டு ராஜேந்திரன், இடத்தை கொடுக்க மாட்டேன் என்று ராஜேந்திரன் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விவரம் எனக்கு தெரியுமா என்றால்?

பதில் – தெரியாது.

கேள்வி – வக்கில் நோட்டீஸ் அனுப்பிய பிறகு சந்தோஷ் கோபமாகி அங்காளம்மன் கோவில் பாதையில் நின்று ராஜேந்திரனை கொலை செய்துவிடுவதாக மிரட்டிய விவரத்தை மணிகண்டன் அ.சா.1 அருண்ராஜுயிடம் போனில் தெரிவித்தாரா என்றால்?

பதில்– தெரியாது.

கேள்வி – அவ்வாறு சத்தம் போட்ட போது, நான், மணிகண்டன், சந்தோஷ், உறவினர்கள் இருந்தோமா என்றால்?

பதில்– இல்லை.

கேள்வி – அ.சா.4 மணிகண்டன் போன் செய்து சொன்னவுடன் அ.சா.1 அருண் ராஜ் அங்கு வந்தாரா என்றால்?

பதில் – வந்தார். போன் செய்து வந்தாரா என்று தெரியாது.

கேள்வி –அ.சா.1 வந்து மாமனார், மாமியாரை பார்த்தாரா என்றால்?

பதில் – தெரியாது.

கேள்வி – இறந்தவரை நான் போய் சம்பவயிடத்தில் பார்த்தேனா என்றால்?

பதில் – பார்த்தேன். கொல்லையில் கொட்டகைக்கு முன்னால் சரிவாக ஒரு மேடு இருக்கும் சரிவில் வெட்டுப்பட்டு தலை குப்புற ரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார்.

கேள்வி – எதிரிகளுக்கும் ராஜேந்திரனுக்கும் இடப்பிரச்சனை ஏற்பட்டு, அதனால் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக சந்தோஷ், கோபவத்தில் ராஜேந்திரனை வெட்டிவிடுவதாக மிரட்டியதை நேரில் பார்த்ததாகவும், அது

குறித்து அருஷ் ராஜுக்கு அ.சா.4 தகவல் தெரிவித்த விவரம் தெரியும் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/உண்மை நகல்/

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 31/2022** | |
| Prosecution Witness | | | : | **PW - 5** | |
| Name | : | சிலம்பரசன் | Caste | : | |
| Father's Name | : | நாகராஜன் | Calling | : | |
| Village | : | பழைய செட்டித்தெரு, உப்பிலியப்பன் கோவில் | Religion | : | |
| Taluk | : | கும்பகோணம் | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11th day of September 2023. 11-09-2023

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை)

**முதல் விசாரணை**

நான் பழைய செட்டித்தெரு, உப்பிலியப்பன் கோவிலில் வசித்து வருகிறேன். பந்தல் டெக்ரேசன் வேலை பார்க்கிறேன். அ.சா.1 முதல் அ.சா.4 யை தெரியும். ஆஜர் எதிரிகளான சந்தோஷ், ராஜேஷ், செந்தில் குமார் ஆகியோரை தெரியும். அ.சா.1 அருண் ராஜ் என் நண்பர். ஸ்கூலில் ஒன்றாக படித்தோம். அவர் எங்கள் ஊரில், என் தெருவில் பெண் எடுத்திருக்கிறார். ஆஜர் எதிரி சந்தோஷ் என் தெருவிற்கு இரண்டு தெரு தள்ளி சந்தானமாரியம்மன்கோவிலுக்கு பின்புறம் குடியிருக்கிறார். இறந்து போன ராஜேந்திரன் அய்யாவடி அற்றங்கரையில் காளவாய் வைத்திருந்தார். அங்கேயே தங்கியிருந்தார். சந்திரகாசன் இடத்தை பார்த்து வந்தாரா என்று தெரியாது. விவசாயமும் பார்த்து வந்தார். சந்தோஷீக்கும் ராஜேந்திரனுக்கும் என்ன பிரச்சனை என்று தெரியாது. முதல் நாள் சந்தோஷ் சத்தம்

போட்டுக்கொண்டிருந்ததாக அருணுக்கு மணிகண்டன் போன் செய்து சொன்னதாக சொன்னார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கேள்வி – இறந்து போன ராஜேந்திரன் பழைய செட்டி தெருவில் குடியிருக்கிறாரா என்றால்?

பதில் – ஆமாம்.

கேள்வி – ராஜேந்திரன் அய்யாவாடி நாட்டாற்றங்கரையில் சொந்தமாக இடமும், வயலும் வைத்து அதில் செங்கல் காளவாய் போட்டும், அருகில் உள்ள இடத்திலும் காய் கறி பயிற் செய்தும் வந்தார் என்றால்?

பதில் – காளவாய் போட்டது தான் தெரியும்.

கேள்வி – ராஜேந்திரன் மட்டும் அங்கேயே ஒரு கீற்றுக்கொட்டகை போட்டு குடியிருந்தாரா என்றால்?

பதில் – ஆமாம்.

கேள்வி – ராஜேந்திரனோடு எப்போதும் சந்தானகிருஷ்ணனும் உடன் இருப்பாரா என்றால்?

பதில் – ஆமாம்.

கேள்வி – ராஜேந்திரன் இடத்திற்கு பக்கத்தில் சந்திரகாசனுக்கு சொந்தமான இடம் இருந்தது என்றால்?

பதில் – தெரியாது.

கேள்வி –சந்திரகாசன் உயிருடன் இருக்கிறாரா என்றால்?

பதில் – தெரியாது.

கேள்வி – சந்திரகாசன் இறந்த பிறகு அந்தயிடத்தை ராஜேந்திரன் தான்

பராமரித்து வந்தாரா என்றால்?

பதில் – தெரியாது.

கேள்வி – சந்தானகிருஷ்ணன் சந்திரகாசனுக்கு விற்ற இடத்தை கேட்டு சந்தோஷம், சுரேஷும் போய் தகராறு செய்தார்களா என்றால்?

பதில் – தெரியாது.

கேள்வி – அது சம்மந்தமாக ஊர் முக்கியஸ்தர்களை வைத்து ஒரு பத்திரத்தில் எழுதி வாங்கிக்கொண்டார்களா என்றால்?

பதில் – ஆமாம். பரஞ்சோதியை வைத்து எழுதிக்கொண்டதாக சொன்னார்கள்.

கேள்வி – அவ்வாறு பத்திரத்தில் எழுதி கொடுத்துவிட்டு ராஜேந்திரன், இடத்தை கொடுக்க மாட்டேன் என்று ராஜேந்திரன் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விவரம் எனக்கு தெரியுமா என்றால்?

பதில் – ஆமாம்.

கேள்வி – வக்கில் நோட்டீஸ் அனுப்பிய பிறகு சந்தோஷ் கோபமாகி அங்காளம்மன் கோவில் பாதையில் நின்று ராஜேந்திரனை கொலை செய்துவிடுவதாக மிரட்டிய விவரத்தை மணிகண்டன் அ.சா.1 அருண்ராஜுயிடம் போனில் தெரிவித்தாரா என்றால்?

பதில்– அ.சா.1 அருண் தான் தன்னிடம் மணிகண்டன் சொன்னதாக சொன்னார்.

கேள்வி – அவ்வாறு சத்தம் போட்ட போது, நான், மணிகண்டன், சந்தோஷ், உறவினர்கள் இருந்தோமா என்றால்?

பதில்– இருந்தோம். பிறந்தநாள் விழா முடிந்தபிறகு தான் சத்தம் போட்டதாக கேள்விபட்டேன்.

கேள்வி – அ.சா.4 மணிகண்டன் போன் செய்து சொன்னவுடன் அ.சா.1

அருண் ராஜ் அங்கு வந்தாரா என்றால்?

பதில் – வந்தார். வந்து என்னை கூப்பிட்டார்.

கேள்வி –அ.சா.1 வந்து மாமனார், மாமியாரை பார்த்தாரா என்றால்?

பதில் – என்னை வந்து கூப்பிட்டார். நானும் அதே தெருவில் தான் உள்ளேன். போய் மாமனார், மாமியாரை பார்த்தார்.

கேள்வி –அவ்வாறு அ.சா.1 அருண் ராஜ் என்னையும், மாமனார், மாமியாரையும் வந்து பார்த்துவிட்டு போன மறுநாள் தான் ராஜேந்திரன் கொலை செய்யப்பட்டு இறந்துவிட்டாரா என்றால்?

பதில் – ஆமாம்.

கேள்வி – இறந்தவரை நான் போய் சம்பவயிடத்தில் பார்த்தேனா என்றால்?

பதில் – பார்த்தேன். மண் தரையில், கொட்டகைக்கு முன்னால் வெட்டுப்பட்டு தலை குப்புற ரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார்.

கேள்வி – மணிகண்டன், அ.சா.1 அருண் ராஜ்யிடம் எதிரி சந்தோஷ் குமார், அ.சா.1ன் மாமனார் ராஜேந்திரனை வெட்டி கொலை செய்ய போவதாக சொல்லிக்கொண்டிருந்த விவரத்தை போன் மூலமாக அ.சா.1யிடம் தெரிவித்தார் என்றாலும், அவ்வாறு சந்தோஷ் சத்தம் போட்ட போது, மணிகண்டனுடன் நான் அந்தயிடத்தில் இருந்தேன் என்று நான் சந்தோஷ் மிரட்டிய விவரத்தை அ.சா.1 ஊருக்கு வந்தபோது நான் சொன்னேன் என்றாலும், அ.சா.1 அன்றே வந்து என்னை பார்த்துவிட்டு, தன் மாமனார் மாமியரையும் பார்த்து எச்சரித்துவிட்டு போனார் என்றாலும், தற்போது எதிரிகள் செந்தில், சந்தோஷ் என் ஊர்காரர்கள் என்பதால்,

ராஜேஷ் வேண்டியவர் என்பதாலும் அவர்களை இந்த வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/உண்மை நகல்/

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | : | **S.C : 31/2022** | | |
| Prosecution Witness | | : | **PW - 4** | | |
| Name | : மணிகண்டன் | | Caste | : | |
| Father's Name | : திருசங்கு | | Calling | : | |
| Village | : சந்தானமாரியம்மன்கோவில் தெரு, உப்பிலியப்பன் கோவில் | | Religion | : | |
| Taluk | : கும்பகோணம் | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11th day of September 2023. 11-09-2023

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை)

**முதல் விசாரணை**

நான் சந்தானமாரியம்மன்கோவில் தெரு, உப்பிலியப்பன் கோவிலில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை பார்க்கிறேன். அ.சா.1 முதல் அ.சா.3 யை தெரியும். ஆஜர் எதிரிகளான சந்தோஷ், ராஜேஷ், செந்தில் ஆகியோரை தெரியும். அ.சா.1 அருண் ராஜ் என் நண்பர். அவர் எங்கள் ஊரில் பெண் எடுத்திருக்கிறார். ஆஜர் எதிரி சந்தோஷ் என் வீட்டிற்கு பக்கத்து வீடு. நான் என் பிரண்டு அருண் ராஜ்க்கு போன் செய்து, தகவல் சொன்னேனா என்றால் சொன்னேன். சந்தோஷ் சத்தம் போட்டுக்கொண்டிருப்பதாக போனில் சொன்னேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கேள்வி – இறந்து போன ராஜேந்திரன் பழைய செட்டி தெருவில் குடியிருக்கிறாரா என்றால்?

பதில் – ஆமாம்.

கேள்வி – ராஜேந்திரன் அய்யாவடி நாட்டாற்றங்கரையில் சொந்தமாக இடமும், வயலும் வைத்து அதில் செங்கல் காளவாய் போட்டும், அருகில் உள்ள இடத்திலும் காய் கறி பயிற் செய்தும் வந்தார் என்றால்?

பதில் – ஆமாம்.

கேள்வி – ராஜேந்திரன் மட்டும் அங்கேயே ஒரு கீற்றுக்கொட்டகை போட்டு குடியிருந்தாரா என்றால்?

பதில் – ஆமாம்.

கேள்வி – ராஜேந்திரனோடு எப்போதும் சந்தானகிருஷ்ணனும் உடன் இருப்பாரா என்றால்?

பதில் –தெரியாது.

கேள்வி – ராஜேந்திரன் இடத்திற்கு பக்கத்தில் சந்திரகாசனுக்கு சொந்தமான இடம் இருந்தது என்றால்?

பதில் – ஆமாம். இருந்தது.

கேள்வி –சந்திரகாசன் உயிருடன் இருக்கிறாரா என்றால்?

பதில் – இல்லை.

கேள்வி – சந்திரகாசன் இறந்த பிறகு அந்தயிடத்தை ராஜேந்திரன் தான் பராமரித்து வந்தாரா என்றால்?

பதில் – ஆமாம்.

கேள்வி –அந்தயிடத்தை கேட்டு சந்தோஷம், சுரேஷ்ம் தகராறு செய்தார்களா என்றால்?

பதில் – தெரியாது.

கேள்வி – அது சம்மந்தமாக ஊர் முக்கியஸ்தர்களை வைத்து ஒரு பத்திரத்தில் எழுதி வாங்கிக்கொண்டார்களா என்றால்?

பதில் – ஆமாம்.

கேள்வி – இடத்தை கொடுக்க மாட்டேன் என்று ராஜேந்திரன் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விவரம் எனக்கு தெரியுமா என்றால்?

பதில் – தெரியாது.

கேள்வி – வக்கில் நோட்டீஸ் அனுப்பிய பிறகு சந்தோஷ் அங்காளம்மன் கோவில் பாதையில் நின்று ராஜேந்திரனை கொலை செய்துவிடுவதாக மிரட்டிய விவரத்தை நான் தான் அ.சா.1 அருண்ராஜுயிடம் போனில் தெரிவித்தேன் என்றால்?

பதில்– நான் அ.சா.1 அருண் ராஜ்யிடம் இடப்பஞ்சாயத்து ஓடுகிறது என்று தான் சொன்னேன். அ.சா.1 னின் மாமனார் ராஜேந்திரனின் இடப்

பஞ்சாயத்தை தான் சொன்னேன்.

கேள்வி –அவ்வாறு சத்தம் போட்ட போது, சந்தோஷ், சிலம்பரசன், உறவினர்கள் இருந்தார்களா என்றால்?

பதில்– ஆமாம். இருந்தார்கள். அன்று பிறந்தநாள் விழா.

கேள்வி –நான் போன் செய்து சொன்னவுடன் அ.சா.1 அருண் ராஜ் அங்கு வந்தாரா என்றால்?

பதில் – வந்தார்.

கேள்வி –அ.சா.1 வந்து மாமனார், மாமியாரை பார்த்தாரா என்றால்?

பதில் – என்னை பார்த்தார். மாமனார், மாமியாரை பார்த்தாரா என்று தெரியாது.

கேள்வி –அவ்வாறு அ.சா.1 அருண் ராஜ் என்னை வந்து பார்த்துவிட்டு போன மறுநாள் ராஜேந்திரன் கொலை செய்யப்பட்டு இறந்துவிட்டாரா என்றால்?

பதில் –மறுநாள் காலை அருண் ராஜ் தான் வந்து என்னை எழுப்பி, தன் மாமனார் இறந்துவிட்டார் என்று சொன்னார்.

கேள்வி – இறந்தவரை நான் போய் சம்பவயிடத்தில் பார்த்தேனா என்றால்?

பதில் – பார்த்தேன். தலை குப்புற ரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார்.

கேள்வி –நான் அ.சா.1 அருண் ராஜ்யிடம் எதிரி சந்தோஷ் குமார், அ.சா.1 ன் மாமனார் ராஜேந்திரனை வெட்டி கொலை செய்ய போவதாக சொல்லிக்கொண்டிருந்த விவரத்தை போன் மூலமாக அ.சா.1 யிடம் தெரிவித்தேன் என்றாலும், அவ்வாறு நான் தெரிவித்த பிறகு தான் அ.சா.1 ஊருக்கு வந்து என்னையும், தன் மாமனார் மாமியரையும் பார்த்து

எச்சரித்துவிட்டு போனார் என்றாலும், தற்போது எதிரிகள் சந்தோஷ் எனக்கு பக்கத்து வீட்டுக்காரரர் என்பதாலும் என் ஊர்காரர் என்பதாலும் அவரை இந்த வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/உண்மை நகல்/

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
**Fast Track Court, Kumbakonam.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 31/2022** | |
| Prosecution Witness | | | : | **PW - 3** | |
| Name | : | மணிகண்டன் | Caste | : | |
| Father's Name | : | ராஜேந்திரன் | Calling | : | |
| Village | : | பழைய செட்டி தெரு, உப்பிலியப்பன் கோவில் | Religion | : | |
| Taluk | : | கும்பகோணம் | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11th day of September 2023. 11-09-2023

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை)

**முதல் விசாரணை**

எனக்கு பழைய செட்டி தெரு, உப்பிலியப்பன்கோவில் எனக்கு சொந்த ஊர், அங்கு என் அம்மாவுடன் வசித்து வந்தேன். நான் வலைங்கைமான் பாலிடெக்னிக்கில் டிப்ளோமா படித்து, பெரம்பலூர் எம்.ஆர்.எப் டயர் கம்பெனியில் வேலை பார்க்கிறேன். இந்த வழக்கில் இறந்து போன ராஜேந்திரன் என் தகப்பனார். என் அப்பா அய்யாவடி ஆற்றங்கரையில் செங்கல் காளவாய் வைத்து கல் அறுத்துக்கொண்டிருந்தார். பக்கத்தில் இருந்த இடத்தில் காய் கறி சாகுபடி செய்து வந்தார். ஆத்தங்கரை ஓரத்தில் ஒரு கொட்டகை போட்டு, கல்லு அறுக்கும் இடத்திலேயே தங்கியிருந்தார். எப்பொழுதாவது தான் என் அப்பா வீட்டிற்கு வருவார். என் அப்பாவுடன் சந்தானகிருஷ்ணனும்

தங்கியிருந்தார். என் வீட்டிற்கு தேவையானதை என் அக்கா வீட்டுக்காரர் என் மாமா தான் வாங்கி வருவார். எங்கள் இடத்திற்கு பக்கத்தில் சந்தானகிருஷ்ணன் அனுபவத்தில் இருந்த இடத்தை என் பெரியப்பா சந்திரகாசன் விலைக்கு வாங்கி அனுபவித்து வந்தார். என் பெரியப்பா சந்திரகாசன் இறந்த பிறகு அந்தயிடத்தை என் அப்பா தான் பராமரித்து வந்தார். மார்ச் மாதம் 11 ஆம் தேதி 2021 ஆம் வருடம் சந்தோஷ் என்பவரும், சந்தானகிருஷ்ணன் அண்ணன் பையன் சுரேஷ் குமாரும் அந்த இடம் தங்கள் தாத்தாவிற்கு சொந்தமானது, எங்களை கேட்காமல் சந்தானகிருஷ்ணன் அந்தயிடத்தை சந்திரகாசனுக்கு விற்றுவிட்டார். அதை திருப்பி கொடுத்திருங்க என்று என் அப்பாவிடம் கேட்டிருக்கிறார்கள். என் அப்பா தரமுடியாது என்று சொல்லியிருக்கிறார். ஊரில் 4 பேரை அழைத்து வந்து, ஒரு 20 ரூபாய் பத்திரம் எழுதி என் அப்பாவிடம் கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள். அந்த பத்திரத்தில் 3 மாதத்திற்குள் இடத்தை திருப்பி தரவேண்டும் என்று எழுதி வாங்கியிருக்கிறார்கள். 28/06/2021 அந்த பத்திரத்தின் கெடு முடிகிறது. அப்பா வந்து சந்தோஷ்க்கும், சுரேஷ் குமாருக்கும் வக்கில் நோட்டீஸ் அனுப்பிவிட்டார். அதில் இருந்து என் அப்பாவை கொல்ல போறேன் வெட்ட போறேன் என்று சந்தோஷ்ம், சுரேஷ் குமாரும்

மிரட்டிக்கொண்டிருந்தார்கள். ஊருக்குள்ளும் அவ்வாறு சொல்லிக்கொண்டிருந்தார்கள். 01/07/2021 அன்று வக்கில் நோட்டீஸ் அனுப்பிய ராஜேந்திரன் நாளைக்கு உயிரோடு இருக்கிறானா பாரு நான் வெட்டறேன் எவன் கேக்கிறானு பாரு என்று அங்காளம்மன் கோவிலுக்கு போகும் பாதையில் நின்று சொல்லிக்கொண்டிருந்ததை அங்கு ஊரில் இருப்பவர்கள் பார்த்துவிட்டு வந்து என்னிடம் சொன்னார்கள். மாமாவிற்கு தெரிந்தவர்களும் சந்தோஷ் உடன் அங்கு இருந்தார்கள், அவர்கள் உடனே என் மாமா அ.சா.1 ற்கு போன் செய்து, சொல்லிவிட்டார்கள். மாமா நேராக வீட்டிற்கு வந்து என் அம்மாவிடம் சொல்லிவிட்டு, நேராக என் அப்பாவிடம் போய் இவ்வாறு சந்தோஷ் மிரட்டி கொண்டிருக்கும் விவரத்தை சொல்லியுள்ளார். ஏற்கனவே அன்று சந்தோஷ்குமார் வந்து மிரட்டிவிட்டு போனதாகவும், அப்போது சந்தானகிருஷ்ணன் சமாதானம் படுத்தி அனுப்பி வைத்ததாகவும், நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லி என் மாமாவை என் அப்பா அனுப்பிவிட்டார். அடுத்து நாள் 02/07/2021 அன்று காலை 6, 6.30 மணியிருக்கும் சந்தானகிருஷ்ணன் என் வீட்டிற்கு வந்து என் அப்பா மண்டயை உடைத்துவிட்டார்கள். தண்ணீர்கொடுத்து பார்த்தேன் பேச்சு மூச்சு இல்லை என்று சொன்னவுடன், என் அண்ணன் ரமேஷ் குமார், பெரியப்பா பழனிசாமி

ஆகியோர் போனார்கள். நான் பின்னால் சைக்களில் போனேன். நான் போய் பார்த்து போது என் அப்பா வெட்டுப்பட்டு செத்து கிடந்தார். என் அப்பாவிற்கு முன் நெற்றி, உச்சந்தலை, புடணி, கழுத்து, கண்ணறுகே, இடது கை மற்றும் பல இடங்களில் வெட்டுப்பட்டு கிடந்தார். தலை குப்புற ரத்த வெள்ளத்தில் கிடந்தார். ஆஜர் எதிரிகள் சந்தோஷ், ராஜேஷ், செந்தில் தான் என் அப்பாவை மிரட்டியவர்கள் நீதிமன்றத்தில் இருக்கிறார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/உண்மை நகல்/

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 31/2022** | |
| Prosecution Witness | | | : | **PW - 2** | |
| Name | : | ஜீவா | Caste | : | |
| Father's Name | : | ராஜேந்திரன் | Calling | : | |
| Village | : | பழைய செட்டி தெரு, உப்பிலியப்பன் கோவில் | Religion | : | |
| Taluk | : | கும்பகோணம் | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11th day of September 2023. 11-09-2023

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை)

**முதல் விசாரணை**

நான் பழைய செட்டி தெரு, உப்பிலியப்பன்கோவிலில் வசித்து வருகிறேன். எனக்கு ஒரு மகன் மணிகண்டன், மகள் பிரியங்கா. அ.சா.1 என் மருமகன். என் மகளும், மருமகனும் சின்ன தேவனார்விளாகத்தில் வசிக்கிறார்கள். என் வீட்டுக்காரர் அய்யாவடி, நாட்டாற்றங்கரையில் எங்களுக்கு சொந்தமான இடத்தில் செங்கல் காளவாய் போட்டு, அங்கேயே ஒரு கொட்டகை போட்டு வசித்து வந்தார். கொஞ்சம் காய் கறி பயிரும் செய்து வந்தார். 30 வருடத்திற்கு முன்பே என் கொழுந்தனார் சந்திரகாசன் என்பவர் எங்கள் இடத்திற்கு பக்கத்து இடத்தை வாங்கியிருந்தார். அவர் இறந்துவிட்டார். அவர் இடத்தையும் என் வீட்டுக்காரர் தான் பராமரித்து வந்தார். என் வீட்டுக்காரரிடம் சந்தோஷ் தன் தாத்தா வைத்திருந்ததாக சொல்லி என் வீட்டுக்காரரிடம் கேட்டு அடிக்கடி பிரச்சனை செய்து வந்தார். 11/03/2021 அன்று என் வீட்டுக்காரர் இடத்தை 3 மாதத்தில் தருகிறேன் என்று ஒரு 20 ரூபாய் பத்திரத்தில் எழுதி கொடுத்தார்.

ஆனால் என் வீட்டுக்காரர் கொடுக்காமல் 28/06/2021 அன்று நோட்டீஸ் அனுப்பிவிட்டார். கோர்ட் மூலமாக பார்த்துக்கொள்ளுங்கள் சொல்லி ஒரு நோட்டீஸ் அனுப்பிவிட்டார். அந்த நோட்டீஸ் கிடைத்தவுடன் இடத்தை தரமாட்டேன் என்று சொல்கிறாய் உன்னை வெட்டி விடுவேன், குத்திவிடுவேன் என்று சந்தோஷ் என் வீட்டுக்காரரை மிரட்டினார். அவ்வாறு என் வீட்டுக்காரரை மிரட்டிய எதிரிகள் ஆஜர் எதிரிகளான ராஜேஷ், சந்தோஷ், செந்தில் ஆகும். திருநாகேஸ்வரம், அய்யாவடி, அங்காளம்மன் கோவில் பின்புறம் நின்று நாளைக்கு காலையில் நீ உயிரோடு இருக்கமாட்ட வெட்டிவிடுவேன் என்று மிரட்டினார்கள். அவ்வாறு மிரட்டிய விவரத்தை மணிகண்டன் என்பவர் என் மருமகனிடம் சொல்லி, என் மருமகன் வந்து என்னிடம் சொன்னார். என் மருமகன் என்னிடம் சொல்லிவிட்டு, நான் மாமாவிடம் சொல்லி அவரை அழைத்து வருகிறேன் என்று சொன்னார். என் மருமகன் என் வீட்டுக்காரரிடம் போய் எதிரிகள் இவ்வாறு வெட்டிவிடுவதாக சொல்வதால் வீட்டிற்கு வந்துவிடுங்கள் என்று சொன்னதற்கு இல்ல காலையில இங்கு வந்து அப்படி தான் சந்தோஷ் சத்தம் போட்டுட்டு போனான். சந்தானகிருஷ்ணன் சமாதானம் படுத்தி அனுப்பியிருக்கிறார். நான் இங்கேயே இருக்கேன் விறக எல்லாம் கிடக்கு திருட்டு போயிடும் பத்திரமா கதவ பூட்டிக்கிட்டிருக்கேன் சொல்லியுள்ளார். அதனால் என் மருமகன் வீட்டிற்கு போய்விட்டார். 02/07/2021 அன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு என் கொழுந்தனார் பழனிசாமியிடம் வந்து விவரம் சொல்லி அவர்கள் எல்லாம் பார்த்துவிட்டு எனக்கு போன் செய்தவுடன் நான் போய் காளவாயில் கொட்டகைக்கு வெளியில் தலைக்குப்புற வெட்டுப்பட்டு கிடந்தார். அவருக்கு தலை, கண்ணம், தலை பின்புறம், இடது

உள்ளங்கை, புடணி ஆகிய இடங்களில் வெட்டுப்பட்டு ரத்த வெள்ளத்தில் கிடந்தார். என் மருமகன் காவல் நிலையம் போய் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/உண்மை நகல்/

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 31/2022** | |
| Prosecution Witness | | | : | **PW - 1** | |
| Name | : | அருண்ராஜ் | Caste | : | |
| Father's Name | : | கிருஷ்ணமூர்த்தி | Calling | : | |
| Village | : | சின்னதேவனார்விளாகம் | Religion | : | |
| Taluk | : | கும்பகோணம் | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11th day of September 2023. 11-09-2023

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை)

**முதல் விசாரணை**

நான் சின்னதேவனார்விளாகத்தில் வசித்து வருகிறேன். நான் கார் மெக்கானிக்காக வேலை பார்க்கிறேன். என் மனைவி பெயர் பிரியங்கா. என் மனைவியின் சொந்த ஊர் உப்பிலியப்பன் கோவில், பழைய செட்டி தெரு. அங்கு என் மாமனார் ராஜேந்திரனும், மாமியார் ஜீவா, என் மனைவியின் சகோதரர் மணிகண்டன் ஆகியோர் வசித்து வந்தார்கள். என் மாமனார் அய்யாவடி, நாட்டாற்றங்கரையில் செங்கல் காளவாய் போட்டும், பக்கத்தில் இருக்கும் இடத்தில் விவசாயம் செய்தும் வந்தார். அவர் அங்கேயே குடிசை போட்டு தங்கியிருந்தார். அவருடன் சந்தானகிருஷ்ணன் என்பவரும் உடன் இருந்தார். அந்தயிடத்திற்கு மேற்கு பக்கம் ராஜேந்திரனின் அண்ணன் சந்திரகாசனுக்கு சொந்தமாக

இருந்தது. அந்தயிடத்தையும் சந்திரகாசன் இறந்த பிறகு என் மாமனார் தான் பார்த்து வந்தார். தெட்சிணாமூர்த்தியின் மகன் சந்தானகிருஷ்ணன் தாத்தா காலத்திலேயே அந்தயிடத்தை 75 குழியை சந்தரகாசனுக்கு விற்றுவிட்டார். அந்த இடம் ஆற்று புறம்போக்கு இடமாகும். சந்தானகிருஷ்ணனின் உறவினர் என்று துரை சாமி மகன் சந்தோஷ் மற்றும் சுரேஷ் குமார் ஆகியோர் எங்களுக்கு தெரியாமல் எங்கள் அப்பாவும், தாத்தாவும் இந்த இடத்தை சந்திரகாசனுக்கு எழுதிகொடுத்துவிட்டார்கள். எங்கள் இப்பொழுது வேறு இடம் இல்லை. செங்கல் காளவாய் போட அந்த இடம் வேண்டும் என்று கிட்டதட்ட 6 மாதம் காலமாக என் மாமனார் ராஜேந்திரனை இருவரும் தொல்லை செய்துவந்தார்கள். அவ்வாறு தொல்லை செய்துவந்தவர்கள் தான் ஆஜர் எதிரிகளான சந்தோஷ், சுரேஷ்குமார் மற்றும் செந்தில் குமார் ஆகியோர் ஆகும். செந்தில் குமார் தான் மற்ற இருவரையும் இது உங்கள் அப்பா இடம் என்று தூண்டிவிட்டவர். 11/03/2021 அன்று இரவு 7 மணியளவில் நாட்டாற்றங்கரை பாலம் அருகே வைத்து என் மாமனாரிடம் ஒரு 20 ரூபாய் பத்திரத்தில் கையெழுத்து வாங்கியதாக சொன்னார். அதில், மூன்று மாத காலத்தில் அந்த 75 குழி இடத்தை கொடுத்துவிட வேண்டும் என்றும், அதில் 10 அடி இடத்தை இவ்வளவு நாள் பார்த்ததற்காக உங்களுக்கே

கொடுத்துவிடுகிறேன் என்று எழுதப்பட்டிருந்தது. அதில் என் மாமனார் கையெழுத்தும், கீழே சுரேஷ் மற்றும் சந்தோஷின் கையெழுத்தும் உள்ளது. அவ்வாறு 20 ரூபாய் பத்திரத்தில் எழுதப்பட்ட உடன்படிக்கை பத்திரம் **அ.சா.ஆ. 1 ஆகும்.** 3 மாதம் கெடு முடிந்து என் மாமனார் சந்தோஷ்க்கும், சுரேஷ் குமாருக்கும் ஒரு வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பினார். அந்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **அ.சா.ஆ. 2 ஆகும்.** அறிவிப்பு சார்வு ஆனவுடன் 01/07/2021 அன்று திருசங்கு மகன் மணிகண்டன் இரவு 8 மணியளவில் எனக்கு போன் செய்து, இடத்தை தர முடியாது என்று என் மாமனார் வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பியதால் சந்தோஷ் குமார் என் மாமனாரை வெட்டப்போவதாக சத்தம் போட்டு, சுற்றிக்கொண்டிருப்பதாக சொன்னார். அதனால் என்னை நேரில் போய் என் மாமனாரை பார்த்துக்கொள்ள சொன்னார். மணிகண்டன் அவ்வாறு சந்தோஷ்குமார் சத்தம் போடுவதை கேட்டபோது உடன் சிலம்பரசன், லாரி டிரைவர் சந்தோஷ் மற்றும் உறவினர்கள் அங்கு இருந்ததாக சொன்னார். நான் நேராக என் மாமியாரிடம் போய் இவ்வாறு மாமனாரை வெட்டப்போவதாக எதிரிகள் சத்தம் போட்டுக்கொண்டிருக்கும் விவரத்தை சொல்லிவிட்டு, என் மாமனாரிடமும் நாட்டாற்றங்கரை போய் அங்கே படுக்க வேண்டாம் வீட்டிற்கு போய்விடுங்கள் என்று சொன்னேன்.

அப்போது என் மாமனார் ராஜேந்திரன் அன்று காலையே சந்தோஷ்குமார் தன்னிடம் நேரில் வந்து, இடத்தை கொடுக்காமல் ஏமாற்றினால் வெட்டிக்கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாகவும், அருகில் இருந்த சந்தானகிருஷ்ணன் இதை பேசி தீர்த்துக்கொள்ளலாம் என்று சமாதானம் படுத்தி அனுப்பியதாக சொன்னார். என்னை ஒன்றும் பண்ணமாட்டார்கள். நான் சாத்திக்கொண்டு படுத்துக்கொள்கிறேன். காலையில் போய் ஸ்டேசனில் புகார் கொடுக்கலாம் என்று என் மாமனார் சொன்னார். நான் என் வீட்டிற்கு போய்விட்டேன். மறுநாள் காலை 02/07/2021 காலை 6.15 மணிக்கு என் போனுக்கு என் மனைவி பிரியங்கா கூப்பிட்டு நாட்டாற்றங்கரையில் தன் அப்பா வெட்டுப்பட்டு கிடப்பதாக சொன்னார். உடனே நான் ஒரு ஆட்டோ எடுத்துக்கொண்டு அந்தயிடத்தில் போய் பார்த்த போது, தலை, புடணி, கண்ணிற்கு கீழ் ஆகிய இடங்களில் வெட்டுப்பட்டு கிடந்தார். தலையிலேயே மூன்று வெட்டு இருந்தது. ரத்தம் உறைந்து தலைக்குப்புற கொட்டகை வாசலில் கிடந்தார். திருநீலக்குடி காவல் நிலையத்திற்கு உள்ளூர்காரர்கள் மூலமாக போனில் தகவல் சொன்னோம். எனக்குள்ள சந்தேகம் மற்றும் விவரங்களை சந்தோஷ்குமார், செந்தில், ராஜேஷ், சுரேஷ் குமார் ஆகியோர் தான் என் மாமனாரை முன்விரோதம் காரணமாக கொலை செய்திருக்கிறார்கள்

என்று நான் புகார் கொடுத்தேன். நானே என் கைப்பட அந்த புகாரை எழுதி கையெழுத்து செய்து கொடுத்தேன். காண்பிக்கப்படும் புகார் தான் என்னால் கொடுக்கப்பட்டது. அந்த புகார் **அ.சா.ஆ. 3 ஆகும்.** இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை சம்பவயிடத்தை வைத்து விசாரித்தார். நான் நடந்த விவரங்களை சொன்னேன்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/உண்மை நகல்/

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.